# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

சுற்றறிக்கை எண்:-3 தேதி 11.03.2010.

## சதியினை தகர்ப்போம்.... BSNLஐ காப்போம்....
## மார்ச் 15ல் ஒன்று பட்ட போராட்டம்.

அன்பார்ந்த தோழர்களே,

BSNLன் வருவாயும் லாபமும் குறைந்து வருவதைக் கணக்கில் கொண்டு அதனை மேம்படுத்துவதற்கான தேவையான நடவடிக்கைகளை பரிந்துரைக்க வேண்டும் என பாரத பிரதமரால் சாம் பிட்ரோடா அவர்களின் தலைமையில் ஒரு குழுவை நியமித்தது.

அதன் பரிந்துரைகள் பல்வேறு பத்திரிக்கை செய்திகள் மூலம் வெளியாகி உள்ளது. அதன் பரிந்துரைகள் எல்லாம் 'போகாத ஊருக்கு வழி சொல்வதனைப் போல உள்ளது. ஒரு சமயத்தில் தனியார் தொலைத் தொடர்பு நிறுவனங்கள் எல்லாம் கேட்டு அமைச்சராலேயே நிராகரிக்கப்பட்ட 'காப்பர் கேபிள்களை தனியாரும் பங்கு போட அனுமதிப்பது' என்ற பரிந்துரையையும் செய்துள்ளதின் மூலம் அந்தக் குழுவின் நோக்கம் நமக்கு தெளிவாக தெரிந்துக் கொள்ள முடிகிறது. கேபிள்களை விற்பது, நிலங்களை விற்பது, 30% பங்குகளை விற்பது, கோபுரம் நிர்மாணிக்க ஒரு தனி அமைப்பு உருவாக்கி அதன் பங்குகளையும் விற்பது என BSNLன் சொத்துக்களை எல்லாம் தனியாருக்கு விற்பது என்று தனியாருக்கு ஆதரவான பரிந்துரைகளை கொடுத்துள்ளதே தவிர BSNLன் வளர்ச்சிக்கு தேவையான பரிந்துரைகள் எதையும் தரவில்லை.

இந்த சூழ்நிலையில் 10.03.2010 அன்று நடைபெற்ற JOINT FORUM OF BSNL ASSOCIATIONS/UNIONS OF EXECUTIVES AND NON-EXECUTIVES கூட்டத்தில் சாம் பிட்ரோடா குழுவின் பரிந்துரைகளை அரசு ஏற்றுக் கொள்ளக் கூடாது என்றும் BSNLன் வளர்ச்சிக்கு தேவையான கருவிகளை டெண்டர் முறையில் உடனடியாக வாங்க வேண்டும் என வலியுறுத்தியும் **15.03.2010 அன்று நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம்** நடத்திட அறைகூவல் விட்டுள்ளது.

**மத்திய அரசே/ BSNL நிர்வாகமே!**

**BSNLன் முப்பது சதவிகித பங்கு விற்பனையை கை விடு...**

**ஒரு லட்சம் ஊழியர்களை விருப்ப ஓய்வு திட்டத்தில் வீட்டுக்கு அனுப்பும் முயற்சியினை கைவிடு....**

**BSNLன் காப்பர் கேபிள்களை தனியாருக்கு தராதே....**

**BSNL பணிகளை Outsourcing செய்யாதே.....**

**ITS அதிகாரிகளை BSNLல் உடனடியாக இணைத்திடு....**

**BSNL வளர்ச்சியை தடைசெய்யாமல் 9.3 கோடி செல்லுலார் இணைப்புக்கான கருவிகள் வாங்கும் டெண்டரை உடனடியாக அமுல் படுத்து...**

**IDA பென்சன் மாற்றத்தை உடனடியாக அமுல் படுத்து....**

BSNLஐ நலிவடையச் செய்து அதனை தனியார்களுக்கு தாரை வார்ப்பதன் மூலம் இந்திய நாட்டின் தொலை தொடர்பு சந்தையை தங்கள் விருப்பம் போல கொள்ளையடிக்க முயற்சிக்கும் பன்னாட்டு பெருமுதலாளிகளின் சூழ்ச்சியில் இருந்து BSNLஐ காப்பாற்றுவது என்பது நமது தேச பக்த கடமை. மக்கள் சொத்தாம் BSNLஐ தனியார் கழுகுகளின் இரையாக்கும் முயற்சியினை தடுத்து நிறுத்தி BSNLஐ பாதுகாத்திட ஒன்று பட்ட போராட்டத்தில் பெரு வாரியாக கலந்துக் கொள்வோம் BSNLஐ காத்திடுவோம். அரசும் நிர்வாகமும் நமது நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள வில்லை எனில் தீவிரமான போராட்டத்திற்கு தயாராவோம்.

ஒன்று பட்டு போராடுவோம்....
BSNLஐ காத்திடுவோம்.....
தேசத்தின் சொத்தை பாதுகாப்போம்....

**வாழ்த்துக்களுடன்,**

**தோழமையுள்ள,**
**S.செல்லப்பா**
**மாநில செயலர்.**